# இந்துசமயம்

# Hinduisme

இந்துசமயம் உலகில் பழமையான சமயங்களில் ஒன்றாகவும், சுமார் 4,500 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகவும் உள்ளது. இந்து சமயத்தைச் சார்ந்த ஒருவரை இந்து என்று அழைக்கின்றனர். சுமார் 1 பில்லியன் மக்கள் (உலக மக்கள்தொகையில் 1/6 பங்கினர்) இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள். இது உலகின் மூன்றாவது பெரிய சமயமாகும். பெரும்பான்மையான இந்துக்கள் ஆசிய நாடுகளில் வாழ்கின்றனர். மேலும் அதிகமானோர் இந்தியா, நேபாளம், இலங்கை, மலேசியா, இந்தோனேசியா, பங்களாதேஷ், மொரீசியஸ் ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர். நேபாளத்தில், இந்துசமயம் அரசாட்சிச் சமயமாக உள்ளது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கூட இந்துக்கள் வாழ்கிறார்கள். நோர்வேயில் வாழும் இந்துக்களில் பெரும்பாலோனர் இலங்கையிலிருந்தும், சிலர் இந்தியாவிலிருந்தும் வந்தனர். சுமார் 15000 இந்துக்கள் நோர்வேயில் வாழ்கிறனர், இவ் இந்துக்களின் பெரும்பாலானோர் ஒஸ்லோவில் வாழ்கிறனர்.

Hinduismen er en av de eldste religionene i verden, og er ca. 4500 år gammel. Den som tilhører hinduismen kalles en hindu. Det er ca. 1 milliard mennesker (ca. 1/6 av verdensbefolkning) som tilhører hinduismen, og den er den tredje største religionen i verden. Hinduene bor stort sett i de asiatiske landene, og de fleste bor i India, Nepal, Sri Lanka, Malaysia, Indonesia, Bangladesh og Mauritius. I Nepal er hinduismen statsreligionen. Det finnes også hinduer i både Europa og Amerika. Hinduene i Norge kommer stort sett fra Sri Lanka, og noen fra India. Det bor rundt 15000 hinduer i Norge, og de fleste bor i og rundt Oslo.

## ஒரு இந்துவின் நம்பிக்கை என்ன?

இந்துசமயத்திற்கு மற்றைய பல சமயங்களைப் போல ஒரு நிறுவுனர் இல்லை. பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு, சில சட்டங்களால் நிர்வகிக்கப்படுகின்றன என்று இந்துக்கள் நம்புகின்றனர். ஒவ்வொரு மனிதனும், மிருகமும், தாவரமும் குறிப்பிட்ட பணிகளைச் செய்ய வேண்டும், இது தர்மம் என்று அழைக்கப்படுகிறது. எல்லா மக்களுக்கும் அவர்களின் குடும்ப உறவுகளையும், வயதினையும் பொறுத்து குறிப்பிட்ட பணிகளையும் கடமைகளையும் கொண்டுள்ளனர்.

ஒரு உயிரித்தின் ஆத்மாவானது, இறந்த பின் மீண்டும் ஒரு புதிய உடலில் புகுந்து, ஒரு புதிய ஆத்மாவாக மறுபடியும் பிறக்கிறது என இந்துக்கள் நம்புகிறார்கள். எந்தவிதமான மீள்பிறப்பு உருவாகும் என்பது, ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் என்னென்ன செயல்களைச் செய்திருக்கிறான் என்பதைச் சார்ந்திருக்கிறது. மறுபிறப்புக்கள் மூலம் வாழ்க்கை மீண்டும் மீண்டும் ஒரு வட்டம் வழியாகச் செல்கிறது. ஆனாலும் பெரும்பாலானோர் மறுபிறப்பிலிருந்து விடுபட விரும்புகிறார்கள். மறுபடியும் பிறக்காமல், பிறப்பில் இருந்து விடுபடுதலை **மோட்சம்** என்று அழைப்பார்கள். வாழும் காலத்தில் செய்த நன்மை, தீமைகளின் விளைவாக உருவாகும் **கர்மா** என்று அழைக்கப்படும் ஒரு சட்டத்தால் மறுபிறப்பு நிர்வகிக்கப்படுகிறது. வாழ்க்கைக் காலத்தில் நல்ல செயல்களைச் செய்தால் அடுத்த வாழ்க்கை நல்லதாக இருக்கும், தீய செயல்களைச் செய்தால் அடுத்த வாழ்க்கை கடினமான இருக்கும். பிறக்கும் உயிரினங்கள் எல்லாம் இறக்கின்றன, அவை மீண்டும் மறுபிறப்பு எடுக்கின்றன. இந்த வட்டம் **சாம்சரா** என்று அழைக்கப்படுகிறது.

மனிதன் வாழும் போது ஏனைய உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது என்பது இந்துக்களின் ஒரு முக்கியமான விதி. இவ்விதி ஆன்மாவைக் கொண்டிருக்கும் மனிதன், விலங்குகள் மற்றும் தாவரங்களுக்குப் பொருந்தும். எனவே தான் பல இந்துக்கள் இறைச்சி சாப்பிடமாட்டார்கள். நடைமுறையில், சுமார் 30% இந்துக்கள் சைவர்கள். மாடு புனிதமானதாகக் கருதப்படுவதால், பசுறைச்சி அல்லது எருமைறைச்சி சாப்பிடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்து மதத்தில் வாழும் அனைத்து உயிரும் இந்துசமயத்தில் முக்கியமானது.



*Foto: Pixabay*

## Hva tror en hindu på?

Hinduismen har ikke én grunnlegger slik som mange andre religioner. Hinduer tror på at alt i universet henger sammen og er styrt av bestemte lover. Hvert menneske, dyr og plante har

bestemte oppgaver og dette kalles **dharma**. Alle mennesker har bestemte oppgaver og plikter avhengig av hvilken familie de tilhører, og hvor gammel vedkommende er.

Hinduer tror på at sjelen flytter til et nytt vesen etter døden og blir født på nytt i en ny kropp. Hva slags gjenfødsel det blir, er avhengig av hvilke handlinger et menneske gjør i livet. Livet går i en sirkel gjentatte ganger gjennom gjenfødsel, og de fleste ønsker å bli fri fra gjenfødsel. Det å unngå å bli født på ny kalles **moksha**. Gjenfødselen styres av en lov som heter **karma** som betyr handling. Gode handlinger kan bidra til at det neste livet blir godt, og onde handlinger vil bidra til en vanskelig gjenfødsel. Alt som blir født, dør og blir født på nytt og denne sirkelen kalles **samsara**.

I hinduismen er det en viktig regel at man ikke skal skade noe som lever. Det gjelder både mennesker, dyr og planter som betraktes å ha sjeler. Derfor spiser mange hinduer ikke kjøtt. I praksis er ca 30% av hinduene vegetarianere. Kua betraktes som hellig, og det er forbudt å spise oksekjøtt eller biff. Å ha omtanke for alt som lever er viktig i hinduismen.

## புனிதநூல்கள்

இந்து மத்தில் பல புனித நூல்கள் உள்ளன. அவை பண்டைய மொழியான சமஸ்கிருதமொழியில் எழுதப்பட்டுள்ளன. பழங்கால நூல்கள், வேதங்கள் என்று அழைக்கப்படுகின்றன, அவை **3000** ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டன. பெரும்பாலும் குருக்கள் மட்டும் தான் வேதநூல்களை வாசிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். இவ் வேதங்களை இந்துக்கள் கடவுளை வணங்கும்போது, குருக்களால் பயன்படுத்தப்படுகிறது. வேதம்

என்றால் அறிவு.



**Hellige tekster**

Det er flere hellige tekster i hinduismen. De er skrevet på et gammelt språk som kalles sanskrit. De eldste tekstene kalles vedaskriftene, og de ble skrevet ned for 3000 år siden. Det er stort sett prestene som kan lese vedaskriftene, og de blir brukt når hinduer tilber gudene. Veda betyr kunnskap.

## காபாரதம்

மகாபாரதம் என்பது 800 ஆம் ஆண்டில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட ஒரு கவிதைத் தொகுப்பாகும். இது வாழ்வில் எது சரி, எது பிழை என்ற ஒழுக்கநெறியைப் பற்றிச் சொல்கிறது. மகாபாரதம் நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போர் பற்றியும் சொல்கிறது. இதில் பிரபலமான அர்ஜூனனுக்கும், தேரோட்டியான கிருஷ்ணனுக்கும் இடையே நடைபெற்ற போரைப் பற்றிய ஒரு கதை உண்டு..

## Mahabharata

Mahabharata er en diktsamling som ble skrevet ca 800 år f.kr på sanskrit. Den forteller om livets moral hva som er riktig og galt i livet. Den forteller også om en krig mellom de gode og de onde. Den inneholder en berømt fortelling om samtale mellom krigeren Arjuna og vognføreren gud Krishna før et slag.

## இராமாயணம்

ராமாயணம் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே எழுதப்பட்ட ஒரு நூல். இது விஷ்ணுவின் அவதாரமான இளவரசன் இராமனைப் பற்றியது. இராமன், அவரது மனைவி சீதா மற்றும் அவரது சகோதரர் இலக்குமணன் ஆகியோர்கள் இந்துக்களால் வழிபடப்படுகிறார்கள். இராமனின் நண்பனான குரங்குகளின் தலைவனான ஹனுமான், தீய இராவணனுடன் போராட இராமனுக்கு உதவினார். ஹனுமனையும் பல இந்துக்கள் வழிபடுகின்றனர்.

## Ramayana

Ramayana, som ble skrevet for mer enn 2000 år siden, handler om prins Rama som er en versjon av Vishnu. Rama, hans kone Sita og hans bror Lakshmanan tilbes også av hinduer. Ramas venn apegeneralen Hanuman, som hjalp Rama å bekjempe den onde kongen Ravana, tilbes også av mange hinduer.



*Illustrasjon: Pixabay*

## புராணங்கள்

புராணங்கள் சமயநூல்களாகும். இவை வரலாறு, புவியியல் மற்றும் தெய்வங்களின் கதைகள் என்பன பற்றிக் கூறுகின்றன. அவை பிரபஞ்சத்தின் தோற்றத்தில் இருந்து இறுதி முடிபு வரையிலான வரலாறுகளைக் கூறுகின்றன.

## Purana

Puranene er religiøse tekster som inneholder historie, geografi og fortellinger om gudene. De forteller også om universets historie fra dets første opprinnelse til dets siste slutt.

## இறைவரும் இறைவியரும்

இந்துக்கள் ஒரே ஒரு கடவுள் தான் இருப்பதாக நம்புகிறார்கள். ஆனால் அக்கடவுள் வெவ்வேறு வடிவங்களில் மனிதர்களுக்குத் தோற்றமளிக்கிறார். எனவே, இந்துக்கள் அக்கடவுளின் வெவ்வேறு வடிவங்களான பல இறைவனையும் இறைவியையும் வணங்குகின்றனர். ஒவ்வொரு தெய்வமும் வெவ்வேறு தொழில்களைக் கொண்டிருப்பதாக இந்துக்கள் நம்புகிறார்கள்.

சிவன், விஷ்ணு மற்றும் பிரம்மன் ஆகிய மூவரும் முக்கிய தெய்வங்களாகக் கருதப்படுகிறார்கள். பிரம்மா படைத்தற் கடவுளாக இருந்து அனைத்து உயிரினங்களையும் உருவாக்குகிறார். விஷ்ணு உலகத்தைக் காப்பாற்றுவதோடு மனிதப் பகைகளைக் கட்டுப்படுத்துகிறார். சிவன் எல்லா ஜீவராசிகளையும் அழிப்பார், ஆனால் புதிய வாழ்வை மீண்டும் உருவாக்குகிறார்.

## Guder og gudinner

Hinduer tror at det finnes bare en gud, men den ene guden kan vise seg for mennesker på forskjellige måter. Derfor tilber hinduer flere guder og gudinner. Hinduer tror på at hver gud og gudinne har en funksjon.

De tre hovedgudene kalles Shiva, Vishnu og Brahman. Brahman skaper verden, hersker over alle skapninger. Vishnu bevarer verden og kontrollerer menneskenes skjebner. Shiva ødelegger alt liv, men er den som gjenskaper nytt liv.



*Figur: Pixabay*

சரஸ்வதிதேவி அறிவு, இசை, கலை, ஞானம் மற்றும் கற்றலுக்குரிய தெய்வம் ஆகும். சரஸ்வதி ஒரு வெள்ளை தாமரை மலரில் அமர்ந்து, ஒரு தமிழ்ப் பாரம்பரியக் கருவியான வீணையைக் கையில் வைத்திருக்கிறார். சரஸ்வதி தேவி பிரம்மாவின் மனைவியாவார்.

Gudinne Saraswati er for kunnskap, musikk, kunst, visdom og læring. Saraswati sitter i en hvit lotusblomst og bærer en ‘veena’, et tradisjonelt tamilsk instrument. Gudinne Saraswati er konen til Brahma.



*Foto: Pixabay*

இலட்சுமி அதிஷ்டம், செல்வம், கருவுறுதல் ஆகியவற்றின் தெய்வமாகும். அவர் விஷ்ணுவின் மனைவியாவார், அவர் அடிக்கடி சிவப்புத் தாமரை மலரில் அமர்ந்து கொள்வார்.

Lakshmi er gudinnen for lykke, rikdom og fruktbarhet. Hun er kona til Guden Vishnu, og hun sitter ofte i en rød lotusblomst.



*Illustrasjon: Pixabay*

துர்க்காதேவி வீரத்தின் தெய்வம். அமைதி, செழிப்பு மற்றும் நல்லிணக்கத்தை அச்சுறுத்தும் சக்திகளை எதிர்த்துப் போராடும் சக்தியைத் தருகிறார். அவர் எமக்குப் பாதுகாப்பை தருவதற்காக தீயவர்களை அழிக்கும் வலுவான தெய்வத்தின் வடிவமாகக் கருதப்படுகின்றார்.

Gudinne Durga er for mot og hun tilbes for å bekjempe krefter som truer fred, velstand og harmoni. Hun er den sterke formen til den beskyttende modergudinnen.

விஷ்ணு பிரபஞ்சத்தைக் காத்து, பாதுகாப்பாக வைத்திருப்பதோடு தீமைக்கு எதிராகச் சண்டையிடுகின்றார். பூமியைத் தீமையிலிருந்து காப்பாற்ற விஷ்ணு பலமுறை, பல அவதாரங்கள் எடுத்துப் பூமிக்கு வந்துள்ளார். இராமனும் கிருஷ்ணனும் விஷ்ணுவின் இரு அவதாரர்கள் ஆவர். அழிவில் இருந்து மனிதத்தன்மையைக் காப்பாற்ற விஷ்ணு மீண்டும் பூமியில் அவதரிப்பார் என்று இந்துசமயம் நம்புகிறது.

Vishnu bevarer og beskytter universet, og kjemper mot ondskap. Vishnu har kommet til jorda flere ganger for å beskytte jorda mot ondskap. Rama og Krishna er to representasjoner av Vishnu. Hinduer tror at guden Vishnu vil komme til jorda en gang til for å redde menneskeheten fra ødeleggelse.

## இந்துக்களின் கொண்டாட்டங்கள்

இந்துக்கள் அதிகமான கொண்டாட்டங்களையும் விழாக்களையும் கொண்டாடுகிறார்கள். பல இந்துக்களுக்கு வெள்ளிக்கிழமை ஒரு புனிதநாள். அன்று அவர்கள் கோயிலுக்குச் சென்று, தெய்வங்களை வழிபடுவார்கள்.

## Hinduistiske høytider og seremonier

Hinduer har flere fester og seremonier. For mange hinduer er fredag er en helligdag og de går i tempelet for å tilbe gudene.

## பூஜை

பூஜை என்றால் கடவுள் வழிபாடு. பெரும்பாலும் இந்துக்களின் வீட்டில் பிரார்த்தனை செய்ய எனத் தனி இடம் ஒன்று இருக்கும். அந்தப் பிரார்த்தனை செய்யும் இடத்தில் கடவுள்களின் சிலைகளை வைத்திருப்பார்கள். இந்துக்கள் கடவுளரின் சிலைகளைக் கழுவிச் சுத்தம் செய்து பூக்கள், உணவு, பால் ஆகியவற்றை படைப்பார்கள். இந்துக்கள் தீபம் ஏற்றி, சாம்பிராணி கொளுத்தி, பாடல்கள் பாடிப் பிரார்த்தனை செய்வார்கள். சிலர் தியானம் செய்வார்கள். இந்த விழாவை பூஜை என்று அழைக்கின்றனர். பூஜைக்கு வந்தவர்கள் பூஜைக்குப் பிறகு, கடவுளுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்ணலாம்.

## Pudsja

Pudsja betyr å tilbe gud. Hjemme har hinduene ofte et eget sted for å be. På det stedet plasserer man statuer av gudene som de ber til. Hinduene vasker gudestatuene og serverer dem blomster, mat og melk. Man tenner lys og røkelse og synger og ber.  Noen mediterer. Denne seremonien kalles pudsja. Etter pudsja, kan de som var med under pudsja spise mat som ble ofret til gudene.



*Foto: Pixabay*

## தீபாவளி

தீபாவளி என்பது தீபங்களின் விழா. இது தீமை அழிந்து நன்மை வெற்றி பெறும் என்பதை ஞாபகப்படுத்துவதற்காகக் கொண்டாடப்படுகிறது. தீப ஒளி அதிஷ்டத்தைக் குறிக்கும். இந்துக்கள் தீபங்களை ஏற்றி மற்றவர்களுக்கு நல்ல வாழ்த்துக்களை அனுப்புவார்கள். குடும்பத்தினரும் உறவினரும் ஒன்றாகச் சேருவார்கள். அனைவருக்கும் புதிய ஆடைகள்

கிடைக்கும். இந்துக்கள் இலட்சுமியை தீபாவளி நாளன்று வீட்டுக்கு வரவேண்டும் என்று விரும்புவார்கள்.

## Divali

Divali kalles lysfest og feires for å minne om at det gode vant over det onde. Lys betyr lykke og hinduer tenner lys og sender gode hilser til andre. Hele familien og slekten blir samlet og alle får nye klær. Hinduer ønsker gudinnen Lakshmi velkommen på Divali dagen.

## சிவராத்திரி

சிவராத்திரி ஒவ்வொரு வருடமும் சிவனுக்காகக் கொண்டாடப்படும் தினமாகும். இந்துக்கள் நாள் முழுவதும் நோன்பு நோற்று, கோவிலில் இரவு முழுவதும் விழித்திரிந்து சிவனை வணங்குவர்.

## Shivanatten

Shivanatten er den natten man feirer guden Shiva hvert år. Hinduer sitter våkne gjennom hele natten og mange faster i tempelet.

## நவராத்திரி

நவராத்திரி என்பது ஒன்பது இரவுகள். சக்தியின் வடிவங்களான சரஸ்வதி, இலட்சுமி, துர்க்கா ஆகிய மூன்று தெய்வங்களுக்காக, ஒன்பது நாட்களும் கொண்டாடப்படுகின்றன. முதல் மூன்று நாட்களும் துர்க்காவை வணங்குவர். அடுத்த மூன்று நாட்களும் இலட்சுமியை வணங்குவர். இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதியை வணங்குவர். முதல் முறையாக புதிய கலை, இசை மற்றும் நடனம்

கற்றுக் கொள்ள விரும்புவார்கள். நவராத்திரிக்குப் பின்னர் 10 ஆம் நாளில் முதல் முறையாக கல்வியை கற்கத் தொடங்குவார்கள்.

## Navaratri

Navaratri betyr ni netter. Gudinne Shakthi og hennes tre representasjoner, nemlig Saraswati, Lakshmi og Durga blir feiret de ni dagene. De første tre dagene tilbes Durga, de neste tre dagene tilhører Lakshmi og de siste tre dagene tilbes Saraswati. De som vil lære nye kunst, musikk og dans for første gang, begynner med å få den første undervisningen den 10. dagen etter Navaratri.

# ஹோலி

வசந்தகாலத்தில் மாலை வேளையில் ஹோலி கொண்டாடப்படுகிறது. மக்கள் ஒரு பெரிய நெருப்பை மூட்டி அதில் பழைய பொருள்களைப் போட்டு தீயிடுவர். அது தீய சக்திகளை அழிப்பதற்கான ஒரு அடையாளமாகும்.

## Holi

Holi feires om kvelden om våren. Man tenner et stort bål og de gamle tingene blir kastet i bålet. Det symboliserer at de onde krefter blir brent.

# கோயில்

கோயில்கள் இந்துக்களுக்கான ஆத்மாசாந்திக்குரிய வீடுகளாகும். ஒரு இந்துக்கோவில் ஒரு கடவுளை மையமாகக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. ஆனால் அங்கே பல கடவுள்களின் சிலைகளும் படங்களும் இருக்கும். இந்துக்களுக்கு தெய்வங்களை வணங்குவதே முக்கிய கடமையாகும். எனவே அவர்கள் வாழும் இடங்களுக்கு அண்மையில் உள்ள கோவிலுக்குச் செல்லுகிறார்கள்.
பெரும்பாலான இந்துக்கள் கோவிலுக்குச் செல்லும் போது குளித்து

தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து சுத்தமாகச் செல்வார்கள் அதுமட்டுமல்ல இந்துக்கள் கோவிலுக்குச் செல்லும் போது சைவ உணவை உண்பார்கள். ஒஸ்லோவில் இரு கோவில்களும், துரொண்ணையத்தில் ஒரு கோவிலும், பேர்கனில் ஒரு கோவிலும் என நோர்வேயில் மொத்தமாக நான்கு கோவில்கள் உள்ளன.

இந்துக்கள் கோவிலுக்குள் சென்று கடவுளுக்கு முன் சிரந்தாழ்த்தி நின்று வணங்குவர். கோவில்களில் பூஜை செய்யும் போது குருக்கள் புனித வேதநூல்களில் உள்ள மந்திரங்களைப்பயன்படுத்துகின்றனர். கோவிலுக்குள் நுழைவதற்கு முன்பு எல்லோரும் பாதணிகளைக் கழற்ற வேண்டும்

## Tempel

Templene er åndelige hus for hinduer. Et hinduisk tempel er bygd til ære for en gud, men det kan ha statuer eller bilder av flere guder. Det er viktig for hinduene å tilbe gudene, og derfor vil de besøke gudene der de bor. Hinduer vil være rene når de går i tempelet. Derfor spiser de fleste hinduer bare vegetarmat når de skal i tempelet. Det finnes fire hindutempler i Norge, to i Oslo, en i Trondheim og en i Bergen.

Hinduer går inn i tempelet og står med bøyd hode foran guden for å vise at de vil tjene guden. Det er prestene som utfører pudsja i templer og de bruker de hellige skriftene under pudsja. Alle må ta seg av skoene før de går inn i tempelet.

# இந்துக்களின் புனித இடங்கள்

இந்தியாவில் 75% இந்துக்கள் வாழ்கின்றனர். இந்தியாவில் உள்ள பல இடங்கள் இந்துக்களுக்குப் புனிதமானவை. உதாரணமாக, மலை உச்சிகள், ஆறுகள் மற்றும் பல நகரங்கள். பல இந்துக்களுக்கு, கங்கை நதியும் இமாலய மலைத் தொடர்களும் புனிதமானவை. இந்த இடங்கள் தெய்வீகமாகக் கருதப்படுகின்றன.,

இந்துக்கள் புனித இடங்களில் வாழ்ந்தால் இரட்சிக்கப்படுவதாக நம்புகிறார்கள். சிவபெருமான் இமயமலையுடன் தொடர்புடையதாக இந்துக்கள் நம்புகிறார்கள்.

## Hellige steder for hinduer

I India er det ca. 75% hinduer, og mange steder i India er hellige for hinduer, for eksempel, fjelltopper, elver og byer. For mange hinduer er elven Ganges og fjellkjeden Himalaya hellige. Disse stedene regnes som gudommelige, og hinduer tror at det gir frelse å være på hellige steder. Hinduer tror at guden Shiva er knyttet til Himalaya.



*Foto: Pixabay*